# October 30, 2025- தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகேயுள்ள பசும்பொன்னில் வியாழக்கிழமை (அக். 30) நடைபெறும் முத்துராமலிங்கத் தேவர் குருபூஜை விழாவில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதா கிருஷ்ணன், முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் பங்கேற் கின்றனர்.

   i. பசும்பொன்னில் விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் மக்களவை உறுப்பினருமான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 118- ஆவது ஜெயந்தி விழா, 63– ஆவது குருபூஜை விழா கடந்த 28-ஆம் தேதி தொடங்கியது.
   ii. ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழா ஆண்டுதோறும் அக்.30-ஆம் தேதி கொண்டாடப்படுவதும், இதையொட்டி அரசியல் தலைவர்கள் அக்.29-ஆம் தேதி மதுரையில் முகாமிடுவதும் வழக்கமான நிகழ்வே.

2. கேரளத்தில் மத்திய அரசின் பிஎம்ஸ்ரீ பள்ளிகள்திட்டத்தை ஏற்றுக்கொண்டதற்கு கடும் எதிர்ப்பு எழுந்ததையடுத்து, அந்தத் திட்டத்தை அமல்படுத்துவது நிறுத்திவைக்கப்படுவதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்தார்.

3. தென்காசி அருகே ஆய்க்குடி அனந்தபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் ஒரு லட்சமாவது பயனாளிக்கு வீட்டு சாவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

   i. தமிழகத்தில் கிராமப்புற பகுதிகளில் ஏறத்தாழ 8 லட்சம் குடிசை வீடுகள் உள்ளதாக கண்டறியப்பட்டதன் அடிப்படையில், குடிசையில்லா தமிழ்நாடு என்ற இலக்கை அடையும் பொருட்டு, 2030-ஆம் ஆண்டுக்குள் ஊரகப் பகுதிகளில் 6 ஆண்டுகளில் 8 லட்சம் புதிய வீடுகள் கட்டித் தரப்படும் என, தமிழக அரசு அறிவித்தது.

4. அணுசக்தியைப் பயன்படுத்தி வரம்பில்லாத தூரம் செல்லும் நீர்மூழ்கி ட்ரோனை ரஷியா வெற்றிகரமாக சோதித்துப்பார்த்தது.

   i. இது குறித்து அந்த நாட்டு அதிபர் விளாதிமீர் புதின் கூறியதாவது:
   ii. அணுசக்தி மூலம், தானியங்கி முறையில் இயங்கும் ஆளில்லா நீர்மூழ்கி வாகனமான 'பொசைடன்' வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
   iii. இந்த நீர்மூழ்கி ட்ரோன், ரஷியாவின் மிகவும் மேம்பட்ட சர்மட் ரக பலிஸ்டிக் ஏவுகணையைவிட மிகவும் சக்திவாய்ந்தது.
   iv. பெரிய நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்பட்ட பொசைடன் நீர்முழ்கிட்ரோனில், சாதாரண அணு உலையைப் போல் 100 மடங்கு சிறிய அணுசக்தி என்ஜின் பொருத்தப்பட்டுள்ளது என்றார் அவர்.
   v. ஏற்கெனவே, அணுசக்தியில் இயங்கும், வரம்பில்லா தூரம் செல்லும் தனித்துவமான 'புரேவெஸ்ட்னிக்'ரக க்ரூஸ் ஏவுகணையை ரஷிய கடந்த வாரம் வெற்றிகரமாக சோதித்தது நினைவுகூரத்தக்கது.
   vi. வரம்பில்லா தொலைவு செல்லக்கூடிய ரஷியாவின் இந்த ஏவுகணையும் ட்ரோனும், உலகளாவிய ராணுவச் சமநிலையை பாதிக்கும்; அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளுடனான ரஷியாவின் பதற்றத்தை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

5. ஒலியைவிட வேகமாகச் செல்லும் புதிய 'சூப் பர்சோனிக்' விமானத்தை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் வெற்றிகரமாக சோதித்தது. எக்ஸ்-59 என்ற இந்த விமானத்தை பயணிகள் போக்குவரத்தை மனதில் கொண்டு, நாசாவுக்காக லாக்கீட் மார்டின் நிறுவனம் வடிவமைக்கிறது.

   i. ஏற்கெனவே சூப்பர் சோனிக் பயணிகள் விமானங்கள் இயக்கப்பட்டிருந்தாலும், காதைக் கிழிக்கும் வகையில் அவை

பேரிரைச்சலை எழுப்பியதால் அவற்றின் பயன்பாடு நிறுத்தப்பட்டது.

ii. இந்தச்சூழலில், இரைச்சலை எழுப்பாத சூப்பர்சோனிக் பயணிகள் விமானத்தை உருவாக்கும் நாசாவின் முயற்சியில் இந்த விமானம் உருவாக்கப்பட்டுள்ளது.

6. அமெரிக்காவைச் சேர்ந்த உலகளாவிய இணைய வர்த்தக நிறுவனமான அமேசான், தற்போது சர்வதேச அளவில் பணியாளர்களைக் குறைக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

i. இதன் விளைவாக, இந்தியாவில் மட்டும் சுமார் 800 முதல் 1,000 ஊழியர்கள் வரை பணி இழப்பைச் சந்திக்க நேரிடும்எ ன்ற நிலை உருவாகியுள்ளது.

ii. அமேசான் நிறுவனம் நிர்வாகச் செலவுகளைக் கணிசமாகக் குறைக்கும் நோக்கில், செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தைப் பரவலாகப் பயன்படுத்த முடிவெடுத்திருப்பதால், இந்தப் பணிநீக்கங்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

iii. அமேசான் நிறுவனம் நடப்பு ஆண்டில் 10,000 கோடி டாலருக்கும் அதிகமாக செயற்கை நுண்ணறிவு (ஏஐ) பிரிவில் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. அதேசமயம், ஏஐ தொடர்பான பணிகளுக்குத் தேவையானவர்களை மட்டும் தொடர்ந்து பணியமர்த்தும் நடவடிக்கைகள் நீடிக்கும் என்றும் கூறப்படுகிறது.

7. ஜப்பானின் முதல் பெண் பிரதமர் சனே தகாய்ச்சியுடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் உரையாடினார். அப்போது, இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு தீவிரமாகப் பணியாற்ற இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

i. ஜப்பானின் முதல் பெண் பிரதமராக ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சனே தகாய்ச்சி (64) கடந்த வாரம் பதவியேற்றார்.

8. நாட்டின் மேம்பட்ட, பன்முகத் தாக்குதல் போர் விமானமான ரஃபேலில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சுமார் 30 நிமிஷங்கள் 200 கி.மீ. தொலைவுக்குப் பறந்தார்.

i. இதன் மூலம் ரஃபேல் போர் விமானத்தில் பயணித்த முதல் குடியரசுத் தலைவர் என்ற பெருமை திரௌபதி முர்முக்கு கிடைத்துள்ளது. இவர் கடந்த 2023-இல் சுகோய் 30 எம்கேஐ போர் விமானப் பயணத்தை மேற்கொண்டவர் என்பதால், இரு போர் விமானங்களில் பயணித்த நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் என்ற புதிய வரலாற்றையும் படைத்துள்ளார்.

ii. பிரான்ஸின் டஸால்ட் ஏவியேஷன் நிறுவன தயாரிப்பான ரஃ பேல் விமானம், இந்திய விமானப் படையில் கடந்த 2020, செப்டம்பரில் முறைப்படி இணைக்கப்பட்டது. தற்போது 36 விமானங்கள் செயல்பாட்டில் உள்ளன.

9. மியான்மரில் நீடித்து வரும் மனித உரிமைகள் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும் அமைதியைக் கொண்டுவரவும் அங்கு விரைவாக ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று நியூயார்க்கில் நடைபெற்றுவரும் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் இந்திய நாடாளுமன்றக் குழு வலியுறுத்தியது.